**<u>ADM COURT, SANKARANKOVIL</u>**

**தேதி 30.06.2025**

**அசல் வழக்கு எண். 232/2018**

**வா.சா.1 கருப்பசாமி**

**<u>வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

நான் என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் எனது இடத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து எழுப்பிய சுவற்றை அகற்ற கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண்.933/42 ஆகும். மேற்படி வழக்கு சொத்து எனது தாயார் முப்பிடாதியிடமிருந்து கிரையம் மூலமாக பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான். நாங்கள் கிரையம் பெற்ற சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 5 செண்ட் இடம். எனது சொத்திற்கு கீழ்புறம் உள்ள இடம் பிரதிவாதிக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மேற்படி சொத்து முப்பிடாதி என்பவரிடமிருந்து பிரதிவாதி தாயாரால் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதியின் தாயாரிடமிருந்து பிரதிவாதி வழக்கு சொத்திற்கு கீழ்புறம் உள்ள 6 செண்ட் விஸ்தீரணமுடைய சொத்தை 23.08.2010 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் (ஆவண எண்.2571/2010) மூலம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கும் பிரதிவாதிக்கும் எந்தவருடத்திலிருந்து பிரச்சனை நிலவி வருகிறது என்றால் 2018ம் வருடம் பிரதிவாதி சுவர் எழுப்பியதிலிருந்து எங்கள் இருவருக்கும் பிரச்சனை நிலவி வருகிறது. வழக்கு தபசில் சொத்தை அளவீடு செய்வதற்கு நீதிமன்ற ஆணையர் கோரி மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வழக்கு தபசில் சொத்தை நில அளவையர் மூலம் அளவீடு செய்வதற்கு நடவடிக்கை ஏதேனும் மேற்கொண்டேனா என்றால் நடவடிக்கை மேற்கொண்டேன். அதன்பேரில் காவல்துறை உதவியுடன் சர்வேயரால் வழக்கு சொத்து அளக்கப்பட்டது. மேற்படி

அளவீடு செய்ததன் விளைவாக சர்வேயர் அறிக்கை ஏதேனும் அளித்தாரா என்றால் அளித்தார். மேற்படி சர்வேயர் அறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தை அளப்பதற்கு நான் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றாலும் இவ்வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. வழக்கு சொத்தை அளந்திருந்தால் அதற்கான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், வழக்கு சொத்தை அளவீடு செய்யாததால் தான் அவ்வாறு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எனது இடத்திற்கு கீழ்புறம் உள்ள பிரதிவாதியின் இடத்தில் 2010ம் வருடத்திலேயே பிரதிவாதி வீடு கட்டினார் என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதியின் வீடு எனது இடத்திற்கு கீழ்புறம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துடன் வேறு சொத்துக்கள் சேர்ந்து மொத்த விஸ்தீரணம் 11.5 செண்ட் இருந்தது என்றாலும், மேற்படி 11.5 செண்ட் இடத்தில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 6 செண்ட் இடத்தை அவர் அனுபவம் செய்வதில் இடையூறு செய்யும் நோக்கத்தோடு இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராது 2ம் தபசிலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எந்த ஆக்கிரமிப்பும் பிரதிவாதியால் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. பிராது 1ம் தபசில் சொத்தின் அளவுகள் வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் அளவுகளை விட அதிகமாக உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்தின் தற்போதைய புல எண்.933/5இ என்றாலும், வழக்கு தபசில் சொத்தின் சர்வே எண்.933/42 என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் கிரையம் பெற்றபோது தபசில் சொத்தின் சர்வே எண்.933/5 இ என்று தான் இருந்தது. ஆனால் தற்போது உட்பிரிவு செய்யப்பட்டு தபசில் சொத்தின் சர்வே எண்.933/42 என்று மாறியுள்ளது. வழக்கு சொத்தின் பட்டா எண்.157. நான் தாக்கல் செய்துள்ள பிராது வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எந்த

ஆக்கிரமிப்பும் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்டதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு பிரதிவாதிக்கு வீண் கஷ்ட நஷ்டத்தை நோக்கத்தோடு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும், எனது அனுபவத்தில் உள்ள 5 செண்ட் தபசில் சொத்தில் பிரதிவாதி எந்தவித ஆக்கிரமிப்பும் ஏற்படுத்தவில்லை என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மோசடியான ஆவணங்கள் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 ஆவணம் வழக்கு சொத்து குறித்து என்னால் தயார் செய்யப்பட்ட வரைபடம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும், எனது வழக்கு மூலம் உண்மையானதல்ல என்றாலும் சரியல்ல.

ம.வி.இல்லை.